FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8069838
C

1. District மாவட்டம் : DVAC Chennai | PS காவல்நிலையம் : VAC, HQRS | Year ஆண்டு : 2020 | FIR No. மு.த.அ. எண் : 09 | Date நாள் : 17.09.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018. | Sections பிரிவுகள்: 7, 12
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 16.09.2020 | Date to : நாள் வரை 17.09.2020
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 17.45 hrs | Time to : நேரம் வரை 01.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.09.2020 | Time : நேரம் 19.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.09.2020 | Time : நேரம் 19.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 25 km South West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Sub-Registrar office, Padappai K.R. Puram, A.G. Hospital Road, 2nd Cross Street, Kanchipuram
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Kotishwaran | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Deputy Inspection Cell officer | (g) Address : முகவரி Kanchipuram Collectorate, Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Damotharan, Sub-Registrar, Padappai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : Cash amount Rs. 1,34,890/-
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is enclosed in Seperate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K.S. Anitha Rank Inspector of Police to take up the investigation / Refused Investigation / transferred to PS…………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.S. [signature] 14/09/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
Informed to the Complaint

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.09.2020

Name: பெயர் K.S. Anitha
Rank: நிலை Inspector of Police No. எண் ……….
SIC, V&AC,
Chennai - 16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண் 09/2020, சட்டப்பிரிவு 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.**

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை கே.ஆர்.புரம், ஏ.ஜி.ஹாஸ்பிட்டல் ரோடு, 2-வது குறுக்கு தெரு என்ற முகவரியில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத் தணிக்கை தொடர்பாக திரு.சு.கோட்டிஸ்வரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் 17.09.2020 தேதியிட்டு அளித்த புகார் மனு தொடர்பாக எனது உயர் அதிகாரியின் அனுமதி பெற்று இன்று 17.09.2020 ம் தேதி 19.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திரு.சு.கோட்டிஸ்வரன் அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சு.கோட்டிஸ்வரன்,<br>காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,<br>காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலகம்,<br>(இருப்பு) காஞ்சிபுரம். | காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

ந.க./அ/209/2020 நாள் - 17.09.2020

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - காஞ்சிபுரம் மாவட்டம், கே.ஆர்.புரம், ஏ.ஜி. ஹாஸ்பிட்டல் ரோடு, 2-வது குறுக்கு தெரு என்ற முகவரியில் இயங்கும் படப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள். 16.09.2020 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

-----

காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 16.09.2020-ம் தேதி காஞ்சிபுரம் மாவட்டம், கே.ஆர்.புரம், ஏ.ஜி. ஹாஸ்பிட்டல் ரோடு, 2-வது குறுக்கு தெரு என்ற முகவரியில் இயங்கும் படப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட

மொத்தம் ரூ.1,34,890/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து எண்ணூற்று தொண்ணூறு மட்டும்) மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம் /- சு.கோட்டிஸ்வரன்
மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,
காஞ்சிபுரம்.

Sir, Received the complaint on 17.09.2020 at 02.00 hrs. After obtained approval from superior officers, I have registered a case in V&AC, HQRS, Cr No. 09/2020 u/s 7, 12 of Prevention of corruption (Ammendment) Act 2018 on 17.09.2020 at 19.00 hrs and taken up for Investigation. Sd/- (K.S.Anitha) 17/09/2020, Inspector of Police, V&AC, SIC, Chennai-16.

<u>இருதுறை கூட்டுத் தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு.</u>

காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சிறப்பு புலனாய்வுக் குழு, காவல் ஆய்வாளர்கள் இணைந்து இன்று (16.09.2020) கே.ஆர்.புரம், ஏ.ஜி. ஹாஸ்பிட்டல் ரோடு, 2-வது குறுக்கு தெருவில் அமைந்த காஞ்சிபுரம் மாவட்டம், படப்பை சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை

| | |
|---|---|
| இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திரு.சு.கோட்டிஸ்வரன்,<br>காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்.<br><br>2. திருமதி. திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>3. திரு.எஸ்.செந்தில்குமார், |

| | |
|---|---|
| | காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br>4. திருமதி.எஸ்.மலர்கொடி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை. |

காஞ்சிபுரம் மாவட்டம், படப்பை சார் பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கும் மற்றும் வில்லங்கச்சான்றிதழ்கள் பெறுவதற்கும் அங்கு வரும் பொது மக்களிடம் கையூட்டு பெறுவதாக இரகசிய நம்பத்தகுந்த தகவல் கிடைத்தது. மேற்படி தகவலை எனது உயரதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு, இன்று மாலை 16.00 மணியளவில் எனது அலுவலக பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். இந்த தகவல் காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் இருதுறையின் சம்மதத்தின் பேரிலும் எனது உயரதிகாரிகளின் அனுமதியின் பேரிலும் மேற்படி அலுவலகத்தில் இன்று 16.09.2020 இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து இன்று 16.09.2020 மாலை சுமார் 16.15 மணியளவில், திரு.சு.கோட்டிஸ்வரன், காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப் பிரிவு காவல் காவல் ஆய்வாளர்கள் திரு.எஸ்.செந்தில்குமார், திருமதி.கே.எஸ்.அனிதா, திருமதி.எஸ்.மலர்க்கொடி சகிதம் மேற்படி சார் பதிவாளர் அலுவலகம் படப்பையில் மாலை சுமார் 05.45 மணியளவில் இருதுறை கூட்டு தணிக்கை தொடங்கப்பட்டது. மேற்படி அலுவலகமானது சுற்றுச்சுவரின் நுழைவாயில் முன்புற மற்றும் பின்புற வாசலுடன் வடக்கு தெற்காக அமைந்திருந்தது. தலைவாசலானது கிழக்கு நோக்கி மேற்கு திசையில் அமைந்திருந்தது. உள்ளே நுழைந்ததும் பொது மக்களுக்கான இருக்கைகளுடன் கூடிய

வரவேற்பரை அமைந்திருந்தது. அதன் இடபுறத்தில் கண்ணாடி கதவுகளுடன் கூடிய ஒரு வாசலும் உள்ளே நுழைந்ததும் மேற்கில் கிழக்கு நோக்கி சிறிய அலுமினிய தடுப்புகளுடன் கூடிய கேபினில் சார் பதிவாளர் இருக்கை இருந்தது. அதில் சார் பதிவாளர் திரு.பி.தாமோதரன் அமர்ந்திருந்தார். அவர் இருக்கையின் வலப்புற பக்கவாட்டில் மூன்று கேபின்கள் இருந்தது. அதன் முறையே முதல் அறையில் தலைமை கிளார்க் அவர்களுக்கும் தொடர்ந்து உள்ள இரண்டு அறைகள் பொதுவான அலுவலக எழுத்து பணி செய்வதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. அதனை ஒட்டி இடப்பக்கத்தில் ஆவணங்கள் பதிவறையும் அதனை ஒட்டி இடப்பக்கத்தில் கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய கணிணி அறையும் அமைந்துள்ளது.

கூட்டு தணிக்கை மேற்கொண்டபோது மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் தன்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்களையும் சார் பதிவாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். மேற்படி அலுவலகத்தில் (1) திரு.P.தாமோதரன் சார் பதிவாளர், படப்பை அவர்களும், கணினி அறையில் (2) திரு.ஜெ.ஜெயக்குமார், த/பெ.ஜெயபாலன், கணினி தொகுப்பாளர், (தற்காலிக பணியாளர்) (3) திரு.ஜெ.ஜெயசக்திவேல் த/பெ. ஜெயக்குமார், டேட்டா எண்ட்ரி ஆப்பரேட்டர், (தற்காலிக பணியாளர்) (4) திருமதி.எஸ்.தேவி க/பெ.சரவணன், டேட்டா எண்ட்ரி ஆப்ரேட்டர் (தற்காலிக பணியாளர்), (5) திரு.எம்.லோகேஷ்பாபு, த/பெ.மணி, உதவியாளர், (6) திரு. ஆர்.ஆனந்த் த/பெ.ராஜூ பிள்ளை, அலுவலக உதவியாளர் (7) திருமதி.எம்.ராதா க/பெ.திருமால்வளவன், உதவியாளர் (8) திரு.என்.சேகர், த/பெ.நடராஜன், இரவு காப்பாளர் ஆகியோர் பணியில் இருந்தனர்.

சார் பதிவாளர் திரு.P.தாமோதரன் சார் பதிவாளர், அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். பின்னர் இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுத்தணிக்கை ஆரம்பிக்கப்பட்டது. சார் பதிவாளர் சுற்றுச்சுவர் வளாகத்தில் நின்று கொண்டிருந்த திரு.அண்ணாமலை த/பெ.ஆறுமுகம் என்பவரை விசாரித்தபோது அவர் சார் பதிவாளர் திரு.தாமோதரனிடம் தனிபட்ட ஓட்டுநராக பணிபுரிவதாக கூறினார். அவரை சோதனை

செய்த போது தன் வலது பக்க பேண்டின் பின்புற பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணி பார்க்க அதில் ரூபாய் 5,980/- இருந்தது. அதன் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 1 | Rs.2,000 |
| 2 | Rs.500 x 6 | Rs.3,000 |
| 3 | Rs.200 x 01 | Rs.200 |
| 4 | Rs.100 x 05 | Rs.500 |
| 5 | Rs.50 x 03 | Rs.150 |
| 6 | Rs.20 x 03 | Rs.60 |
| 7 | Rs.10 x 07 | Rs.70 |
| | **Total** | **Rs.5,980** |

மேற்கண்ட பணம் குறித்து திரு.அண்ணாமலையிடம் விசாரித்தபோது பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளர் அலுவலகத்தின் நுழைவாயிலில் பார்வையாளர் பதிவேட்டில் பார்வையாளர்கள் வருகையை பதிவு செய்து கொண்டிருந்தார். அவரை அழைத்து விசாரித்து சோதனை செய்தபோது அவர் பெயர் திரு.சம்பத் த/பெ.திரு.ராஜி என்றும் அவர் தான் அரசு அலுவலர் இல்லை என்றும் சார் பதிவாளரின் உத்தரவுபடி பொது மக்களின் வருகையினை கொரோனா வருகை பதவிவேட்டில் பதிவு செய்து கொண்டிருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்தபோது அவரது பேண்டில் இருந்த பணத்தை ஆஜர் செய்ததில் அதில் ரூபாய் ரூ.1,920/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 2 | Rs.1000 |
| 2 | Rs.200 x 2 | Rs.400 |
| 3 | Rs.100 x 4 | Rs.400 |
| 4 | Rs.50 x 2 | Rs.100 |
| 5 | Rs.10 x 2 | Rs.20 |
| | **Total** | **Rs.1920** |

மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லாததால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது. மேலும் சம்பத் என்பவரிடம் இருந்து கொரோனா வருகை பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளர் சுற்றுச்சுவர் வாளாகத்தில் நின்று கொண்டிருந்த திரு.கணேஷ் த/பெ.எஸ்.வீரராகவன் என்பவரை விசாரித்தபோது அவர் சார் பதிவாளா அலுவலகத்தில் ஈ.சி. பார்ப்பதற்காக வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்த போது தன் வலது பக்க பேண்டின் முன்புற பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணி பார்க்க அதில் ரூபாய் 2,500/- இருந்தது. அதன் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 5 | Rs.2,500 |
| | **Total** | **Rs.2,500** |

மேற்கண்ட பணம் குறித்து திரு.கணேஷ் என்பவரிடம் விசாரித்தபோது பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளருக்கு கொடுக்க வேண்டிய லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளர் அலுவலக வரவேற்பு அறையில் நின்று கொண்டிருந்த ஒரு ஆணை மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் கேட்க, அவர் தனது பெயர் திரு.பூபதி, த/பெ.ஜெயராமன் என்றும், தனது ஓனர் திரு.செந்தில் சென்ற வாரம் அடமான பத்திரம் பதிவு செய்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்த கடன் தொகை தவறாக இருந்ததால் அதை சரி செய்ய சார் பதிவாளர் அலுவலகம் படப்பை வந்ததாகவும் மேற்படி நபர் தனது பின்புற பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து ஆஜர் செய்த பணம் குறித்து விசாரித்தபோது அவர் ரூபாய் 7110/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்கள் மடித்த நிலையில் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 1 | Rs.2,000 |

| | | |
|---|---|---|
| 2 | Rs.500 x 10 | Rs.5,000 |
| 3 | Rs.50 x 02 | Rs.100 |
| 4 | Rs.10 x 01 | Rs.10 |
| | **Total** | **Rs.7,110** |

பின்னர் அந்த பணம் குறித்து திரு.பூபதியிடம் கேட்ட போது அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளருக்கு வழங்கப்படவுள்ள லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் வரவேற்பு அறையில் நின்றுகொண்டிருந்த திரு.ஸ்ரீநிவாசன், த/பெ. சுப்ரமணியன் என்பவரிடம் விசாரித்தபோது வலது பக்க முன்புற பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து ரூபாய் 1460 ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதை பற்றி விசாரிக்க அவர் தனது மனைவியின் பல் சிகிச்சைக்காக வைத்திருந்ததாக கூறினார். அந்த நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.200 x 01 | Rs.200 |
| 2 | Rs.100 x 10 | Rs.1000 |
| 3 | Rs.50 x 1 | Rs.50 |
| 4 | Rs.20 x 04 | Rs.80 |
| 5 | Rs.10 x 13 | Rs.130 |
| | **Total** | **Rs.1460** |

பதிவாளர் அறையில் நின்று கொண்டிருந்த திரு.தயாளன் த/பெ.கோபால் என்பவரை விசாரிக்க தான் கலைமகள் டைப்பிங் சென்டர் ஜாப் டைப்பிங் பணியில் பணி செய்வதாகவும் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் தனது நண்பர் திரு.கோபி கிருஷ்ணன் என்பவரை பார்க்க வந்ததாகவும் கூறினார். அவரிடமிருந்து பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார் அதை எண்ணி பார்த்த போது ரூ.11,460/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 21 | Rs.10.500 |

| | | |
|---|---|---|
| 2 | Rs.100 x 6 | Rs.600 |
| 3 | Rs.200 x 1 | Rs.200 |
| 4 | Rs.50 x 2 | Rs.100 |
| 5 | Rs.10 x 6 | Rs.60 |
| | **Total** | **Rs. 11,460** |

மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லாததால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது.

பின்னர் சார் பதிவாளர் அலுவலகத்தின் இருக்கையின் முன் நின்றுகொண்டிருந்த திரு.கோபிகிருஷ்ணன், த/பெ.ஜெகதீசன் என்ற நபரை விசாரித்த போது தான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு திரு.குமார் என்பவர் பதிவு செய்த ரசீதை பெற்று அவரிடம் கொடுப்பதற்காக வந்ததாக தெரிவித்தார். அவரின் பின்புற பேண்டில் இருந்த பர்சை ஆஜர் செய்ததில் அதில் ரூபாய் ரூ.3,950/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 6 | Rs.3000 |
| 2 | Rs.200 x 01 | Rs.200 |
| 3 | Rs.100 x 6 | Rs.600 |
| 4 | Rs.50 x 1 | Rs.50 |
| 5 | Rs.20 x 2 | Rs.40 |
| 6 | Rs.10 x 6 | Rs.60 |
| | **Total** | **Rs.3.950** |

மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லாததால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளர் அலுவலகத்தின் அறைக்குள் நின்றுகொண்டிருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் திரு.எம்.சரவணன் த/பெ.திரு.முத்து என்றும் அவர் கலைமகள் டைப்பிங் சென்டரில் வேலை செய்து வருதாகவும் திரு.குமார் என்பவர் பதிவு செய்த ஆவணங்களை பெறுவதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்திருப்பதாக கூறினார். அவரை சோதனை செய்தபோது அவரது பேண்டில் இருந்த பணத்தை ஆஜர்

செய்த்தில் அதில் ரூபாய் ரூ.3000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 5 | Rs.2500 |
| 2 | Rs.200 x 02 | Rs.400 |
| 3 | Rs.100 x 1 | Rs.100 |
| | **Total** | **Rs.3000** |

மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லாததால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளர் இருக்கைக்கு இடது புறம் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திரு.லோகேஷ் பாபு, த/பெ.மணி என்றும் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாராக பணிபுரிவதாக கூறினார். அவரிடம் இருக்கும் பணம் குறித்து கேட்க அவர் பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பாரத்தபோது அதில் ரூபாய் 6,890/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்ததில் அவர் அந்த பணத்தை அன்றைய தினத்தில் பதிவு செய்யவில்லை என்று தெரியவந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 11 | Rs.5500 |
| 2 | Rs.200 x 03 | Rs.600 |
| 3 | Rs.100 x 7 | Rs.700 |
| 4 | Rs.50 x 1 | Rs.50 |
| 5 | Rs.10 x 4 | Rs.40 |
| | **Total** | **Rs.6,890** |

மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லாததால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது.

மேலும் மேற்படி லோகேஷ் பாபுவின் மேஜையின் பக்கவாட்டின் மீது இருந்த அலுமினியை பெட்டியை சோதனை செய்த போது அதில் படை வீரர் கொடிநாள் 2019 நிதி ரசீது (ருபாய் நூறுக்கான) நூறு ரசீது தாள்களை கொண்ட அந்த புத்தகத்தில் (062100-062200) பயன்படுத்தப்பட்ட ரசீதுகள் 062100 முதல் 062151 வரை பயன்படுத்தப்பட்டும் மீதி தாள்கள் 062152 முதல் 062200 வரை பயன்படுத்தாமலும் இருந்தது. மேலும் அதற்குரிய தொகையை அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் 2019 கொடிநாள் பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது பதிவேட்டில் 27.08.2020 அன்று ரூபாய் 26,000/- SBI தாம்பரம் வங்கியில் DD No.233973 மூலம் செலுத்தப்பட்டு வரைவோலை ஆக்கப்பட்டு படப்பை சார்பதிவாளர் அலுவலக உதவியாளர் ஆனந்தன் மூலமாக 03.09.2020 அன்று FLAG DAY COLLECTIONS RECEIPT 019205 மூலம் உதவி இயக்குனர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களிடம் வழங்கப்பட்டு ஒப்பதல் பெறப்பட்டது. இந்த பணத்தை செலுத்திய போக 28.08.2020 முதல் 14.09.2020 வரை வசூல் செய்யப்பட்ட கொடி நாள்கொடை ரூபாய் 5400/- இருப்பில் வைக்கப்பட்டது. இன்று வசூல் செய்யப்பட்ட கொடிநாள் கொடை ரூபாய் 100/-ஆக மொத்தம் ரூபாய் 5500/- சரி பார்க்கப்பட்டுள்ளது. மேற்படி அலுமினிய பெட்டியில் இருந்த மீதமுள்ள தொகையை எண்ணி பார்த்த போது அதில் ரூபாய் 2950/- (500 x 2, 200 x 4, 100 x 11, 50 x 1) இருந்தது. அது பற்றி கேட்க அவர் அது கொடிநாள் வசூல் என்று பதில் அளித்தார். ஆனால் கொடிநாள் ரசீதில் ஒப்பிட்டு பார்த்த போது இன்றைய தினத்தில் ரசீது எண் 062141ல் 16/9 என்று தேதியிட்டு தனலட்சுமி என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. மீதமுள்ள ரசீதுகளில் சரியாக பூர்த்தி செய்யப்படவில்லை. அதனால் மேற்படி பணம் ரூபாய் 2950/- லஞ்ச பணம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி ரசீது புத்தகம், அது சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர் சார்பதிவாளர் இருக்கைக்கு வலது புறம் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திருமதி.ராதா, க/பெ.திருமால்வளவன் என்றும் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாராக பணிபுரிவதாக கூறினார். அவரிடம் இருக்கும்

பணம் குறித்து கேட்க அவர் தோள் பையில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பாத்தபோது அதில் ரூபாய் 500/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்ததில் அவர் அந்த பணத்தை அன்றைய தினத்தில் பதிவு செய்யவில்லை என்று தெரியவந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.200 x 1 | Rs.200 |
| 2 | Rs.100 x 03 | Rs.300 |
| | **Total** | **Rs.500** |

மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவர் கூறிய பதில் ஏற்புடையதாக இல்லாததால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கைப்பற்றப்பட்டது.

பின்னர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிழக்கு பக்கத்தில் மேற்கு வாசலுடன் காணப்படும் கணிணி அறையில் முதலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திரு.ஜெயகுமார், த/பெ.ஜெயபாலன் என்றும் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் கேமரா ஆப்ரேட்டராக பணிபுரிவதாக கூறினார். அவரிடம் இருக்கும் பணம் குறித்து கேட்க அவர் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூபாய் 510/- பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பாத்தபோது அதில் ரூபாய் 510/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்ததில் அவர் அந்த பணத்தை அன்றைய தினத்தில் பதிவு செய்யவில்லை என்று தெரியவந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.100 x 3 | Rs.300 |
| 2 | Rs.200 x 1 | Rs.200 |
| 3 | Rs.10 x 1 | Rs.10 |
| | **Total** | **Rs.510** |

மேலும் அவர் இருக்கையின் கணிணி அமைந்த மேஜையின் கீழ் சோதனை செய்த போது அதில் மடிந்த நிலையில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அதை எண்ணி பார்த்த போது ரூபாய் 10000/- இருந்தது. இந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அவா் தனக்கு தெரியாது என்று பதில் அளித்தார். இந்த பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி நோட்டுக்களின் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 19 | Rs.9500 |
| 2 | Rs.200 x 1 | Rs.200 |
| 3 | Rs.100 x 3 | Rs.300 |
| | **Total** | **Rs.10000** |

பின்னர் மேற்படி கணிணி அறையில் ஜெயகுமாரின் வலது புறம் அமா்ந்திருந்த நபரை விசாரிக்க அவா் தன்னுடைய பெயா் திரு.ஜெயசக்திவேல், த/பெ.ஜெயகுமார் என்றும் தான் சாா் பதிவாளா் அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிவதாக கூறினாா். அவரிடம் இருக்கும் பணம் குறித்து கேட்க அவா் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பாாத்தபோது அதில் ரூபாய் 1670/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினாா். அந்த பணத்தை சாா் பதிவாளா் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபா் ரொக்கப்பதிவேட்டில் ஒப்பிட்டு பாா்த்ததில் அவா் அந்த பணத்தை அன்றைய தினத்தில் பதிவு செய்யவில்லை என்று தெரியவந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 2 | Rs.1000 |
| 2 | Rs.200 x 3 | Rs.600 |
| 3 | Rs.50 X 1 | Rs.50 |
| 4 | Rs.10 x 2 | Rs.20 |
| | **Total** | **Rs.1670** |

மேற்படி பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி நோட்டுக்களின் விபரம் பின்வருமாறு.

பின்னர் மேற்படி கணிணி அறையில் ஜெயசக்திவேலின் வலது புறம் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திருமதி.தேவி, க/பெ.சரவணன் என்றும் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிவதாக கூறினார். அவரிடம் இருக்கும் பணம் குறித்து கேட்க அவர் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பாாத்தபோது அதில் ரூபாய் 800/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்ததில் அவர் அந்த பணத்தை அன்றைய தினத்தில் பதிவு செய்யவில்லை என்று தெரியவந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.200 x 1 | Rs.200 |
| 2 | Rs.100 x 6 | Rs.600 |
| | **Total** | **Rs.800** |

மேற்படி பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி நோட்டுக்களின் விபரம் பின்வருமாறு. மேலும் சார் பதிவாளர் அலுவலகத்தின் அறைகளை சோதனை செய்ததில் கீழ்காணும் அறைகளில் இருந்து எடுக்கப்பட்ட கணக்கில் வராத பணங்களின் விவரங்கள் பின்வருமாறு.

சார் பதிவாளர் திரு.தாமோதரன் இருக்கையில் அமர்திருந்தார். அவரை சோதனை செய்த போது அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூபாய் 500/- நோட்டு ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்ததில் அவர் அந்த பணத்தை அன்றைய தினத்தில் பதிவு செய்யவில்லை. எனவே அந்த பணம் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 1,34,890/- பற்றி கேட்டதற்கு சார் பதிவாளர் திரு.தாமோதரன் பதிலளிக்காமல் மௌனமாக இருந்தார்.

| வரிசை எண். | சோதனை செய்யப்பட்ட அறை | ரூபாய் நோட்டுக்களின் விவரம் (In Rupees) | சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ரூபாய் (In Rupees) |
|---|---|---|---|
| 1 | E Stamp room Table | 500 x 5<br>200 x 11<br>100 x 5 | 5200 |
| 2 | Dining Hall (3rd Table) | 500 x 1<br>200 x 3<br>100 x 11<br>20 x 2<br>10 x 2 | 2260 |
| 3 | Dining Hall Dustpin | 2000 x 10<br>500 x 71<br>200 x 6<br>100 x 13<br>50 x 10<br>20 x 3<br>10 x 5 | 58610 |
| 4 | Record room almiraih | 500 x 15<br>100 x 1<br>10 x 2 | 7620 |
| | | **Total** | **73690** |

தொடர்ந்து சார்பதிவாளர் திரு.தாமோதரன் அவர்களிடம் இன்றைய தேதியில் ஆவணங்கள் பதிவு செய்தது தொடர்பாக பெறப்பட்ட கட்டணம் குறித்து கேட்டதற்கு முத்திரை தீர்வாக 42,11,682/- ரூபாய், பதிவு கட்டணமாக 24,20,796/- ஆன்லைன் மூலமாக வசூல் செய்யப்பட்டது. இவற்றை ஆன்லைன் பதிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்த போது சரியாக இருந்தது.

இந்த இருதுறை கூட்டு தணிக்கை சோதனை முடிவில் மேற்கூறியவாறு கணக்கில் வராத மொத்த பணம் 1,34,890/- ரூபாய் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி சார்பதிவாளர் அலவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் வருகை பதிவேடு, தனி நபர் ரொக்க பதிவேடு, இன்றைய தேதியில் பதிவான பத்திரங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய ஆன்லைன் பதிவு ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இருதுறை கூட்டு தணிக்கையின்போது உடமைக்களுக்கோ ஆவணங்களுக்கோ எத்த சேதமும் ஏற்படவில்லை. சார் பதிவாளர் அலுவலக அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு செய்யப்படவில்லை. சோதனையின் போது பெண் காவல் ஆய்வாளர் மற்றும் பெண் காவலர்கள் பணியில் இருந்தனர். இந்த சோதனை 16.09.2020-ம் தேதி மாலை 17.45 மணிக்கு தொடங்கி 17.09.2020-ம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.சு.கோட்டீஸ்வரன்,
காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு
அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

ஒப்பம்/-திருமதி.கே.எஸ்.அனிதா,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.எஸ்.செந்தில்குமார்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.எஸ்.மலர்கொடி,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.ப.தாமோதரன்,
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்,
படப்பை, காஞ்சிபுரம்.

ஒப்பம்/-லோகேஷ்பாபு, ராதா,
ஜெயசக்திவேல், தேவி, ஆனந்தன்,
ஜெயகுமார், சேகர், அண்ணாமலை, ராஜா,
தயாளன், கணேஷ், பூபதி, சம்பத்.

V.S. [signature]
17/09/2020
Inspector of Police,
SIC, V&AC,
Chennai - 16
17/09/2020